சார்பு நீதிமன்றம், மேலூர்

நாள்: 07.03.2026
எ.ம.சா.2 – பன்னீர்செல்வம் S/o வேலுச்சாமி
MCOP No.8/2024
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :

வழக்கு விபரம் பற்றி கோப்பின் அடிப்படையில் எனக்கு நன்றாக தெரியும். என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் வாகன எண்.TN59 CX 6264 வாகனத்திற்கு காப்பீடானது 4 வருட காலம் அதாவது 24.08.2021 முதல் 23.08.2025 வரை 3ம் தரப்பினர் காப்பீடானது செயல்பாட்டில் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன். மேற்படி இருசக்கர வாகனத்தினுடைய உரிமையாளர் T. உதேஷ்குமார் ஆவார். அவர் தான் இந்த வழக்கின் 1ம் எதிர்மனுதாரர். இந்த வழக்கில் விபத்தில் இறந்தவர் கார்த்திக் என்பவர் மதுபோதையில் இருந்தார் என்பதை நிருபிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆவணம் தாக்கல் செய்யவில்லை. ஆனால் மேலூர் அரசு மருத்துவமனையில் பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேட்டின் அடிப்படையில் அவர் குடிபோதையில் தானாக விழுந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி இறந்த கார்த்திக் என்பவர் மதுபோதையில் இறந்ததாக யாரேனும் சாட்சியம் அளித்துள்ளார்களா என்றால் இல்லை. அதேபோல் 3ம் தரப்பினர் யாரேனும் கார்த்திக் மதுபோதையில் இருந்ததாக சாட்சியம் அளித்துள்ளார்களா என்றால் இல்லை. ஒரு நபர் குடிபோதையில் இருக்கும் போது அவருக்கு சிகிச்சை அளிக்க இயலாது என்றால் சாதான். அதனால் தான் அவர் விபத்து நடந்த 29.01.2022 அன்று சிகிச்சைக்கு செல்லாமல் மறுநாள் 30.01.2022 அன்று அரசு மருத்துவமனை மேலூருக்கு சிகிச்சைக்கு சென்ற போது அவர் மதுபோதையில் இருந்த விபரம் கண்டறியப்பட்டுள்ளது. மேற்படி விபத்து பதிவேட்டு நகலையோ, மருத்துவ அறிக்கையையோ நான் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

1ம் எதிர்மனுதாரர் எங்களது காப்பீடு நிறுவனத்தில் இருசக்கர வாகன பதிவு எண்.TN59 CX 6264 விபத்து நடந்த காலத்தில் காப்பீடு செய்திருப்பதாலும் மனுதாரர் 3ம் தரப்பினர் என்பதாலும் விபத்திற்கான இழப்பீடு தொகையை மனுதாரருக்கு எங்களது காப்பீடு நிறுவனம் வழங்க கடமைப்பட்டுள்ளது என்றும், அதேபோல் இறந்தவர் மதுபோதையில் இருக்கிறார் என்பதை நிருபிக்க ஆவணங்கள் இல்லாத நிலையில் காப்பீடை நாங்கள் கொடுக்க கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2026.03.07 18:46:17 +0530

Sub Judge

Melur